# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.

Deposition of Witness for : PW-1 Date : 12.09.2024
Case No. : O.S. 7/2019 Nationality : Indian
Name : பசுபதி Religion :
Father's/Husband's Name : அழகப்பிள்ளை Age : 78
Village :
Taluk :

<u>வா.சா.1</u>

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த வழக்கினை நான் எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் பிரதிவாதி தாவா சொத்தினை ஆக்கிரமித்ததால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து ஆதியில் ஜெயலெட்சுமி அம்மாளுக்கு சொந்தம் என்றால் சரிதான். ஜெயலெட்சுமி அம்மாள் இறந்துவிட்டார் என்றால் சரிதான். ஜெயலெட்சுமி அம்மாளுக்கு நானும், மகாலிங்கமும் வாரிசுகள் என்றால் சரிதான். மகாலிங்கம் இறந்துவிட்டார் என்றால் சரிதான். மகாலிங்கத்தின் வாரிசுகள் விஜயகுமாரி, புனிதா என்றால் சரிதான். இறந்து போன ஜெயலெட்சுமிக்கு பசுபதி, மகாலிங்கம் தவிர வேணு அம்மாள் என்பவர் வாரிசாக இருந்தார் என்றால் சரிதான். அவர் தற்போது இறந்துவிட்டார். வே ணு அம்மாளுக்கு வாரிசுகள் உள்ளார்கள் என்றால் சரிதான். வேணு அம்மாளின் வாரிசுகளை தரப்பினர்களாக சேர்க்காமல் நானும் எனது சகோதரரும் மட்டும் வழக்கு தாக்கல் செய்துள்ளது தவறு என்றால் சரியல்ல. தாவா சொத்து சம்மந்தமாக வரைபடம் ஒன்று தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வரைபடம் அரசாங்கத்தால் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை.

நாங்களாக தயார் செய்ததுதான். பிராதுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள வரைபடம் தவறானது என்றால் சரியல்ல.

2. தாவா சொத்திற்கு வடபுறத்தில் சர்வே எண் 71/3 என்ற சொத்துள்ளது என்றால் சரிதான். அந்த சொத்தில் அரிசி ஆலை 1 மற்றும் கடைகள் உள்ளது என்றால் அரிசி ஆலை மற்றும் 1 கடை உள்ளது. மேற்படி அரிசி ஆலை 1ம் பிரதிவாதிக்கு சொந்தமானது என்றால் சரிதான். அரிசி ஆலை மற்றும் கடை 1ம் பிரதிவாதியின் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வருகிறது என்றால் சரிதான். மேற்படி அரிசி ஆலை ம ற்றும் கடைக்கு தென்புறத்தில்தான் தாவா சொத்துள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து 1ம் பிரதிவாதியின் குத்தகை சாகுபடியில் சுமார் 17 வருடங்களாக இருந்து வருகிறது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் 1ம் பிரதிவாதி கடந்த 5 வருடங்களாக கரும்பு சாகுபடி செய்து வருகிறார் என்றால் இல்லை. 1ம் பிரதிவாதி தாவா சொத்தில் கரும்பு சாகுபடி செய்து வருகிறார் என்றாலும், பயிர்க்கடன் காப்பீடு செய்துள்ளார் என்றாலும் சரியல்ல. அம்பிகா ஆலையிலிருந்து 1ம் பிரதிவாதி கரும்பு சாகுபடிக்காக பதிவு செய்துள்ளார் என்று சொன்னால் நான் ஒப்புக்கொள்வேன் என்றால் சரியல்ல.

(**பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது**).

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

Sd/-N. Sivapalani,
District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.